**செய்தி வெளியீடு எண்: 244** **நாள்: 10.04.2018**

## செய்தி வெளியீடு

மாற்றுத்திறனாளிகளும் பிறரைப்போல் சமஉரிமை மற்றும் வாய்ப்புகளுடன் சமுதாயத்தில் முழுப்பங்கேற்பு வகிக்கும் நோக்கத்தில் தடையற்ற சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் செவித்திறன் குறையுடையோர், பிறருடன் தடையின்றி தகவல் பரிமாற்றத்தினை எளிதில் மேற்கொள்ள சைகைமொழி பெயர்ப்பாளரின் அவசியத்தை அறிந்து அரசு முதற்கட்டமாக மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்தில் சைகை மொழிப்பெயர்ப்பாளர் ஒருவரை தற்காலிகமாக தொகுப்பூதியத்தில் நியமனம் செய்திட முடிவு செய்துள்ளது.

சைகை மொழிப்பெயர்ப்பாளர் பணியிடத்தில் பணிபுரிய கீழ்க்காணும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும். இவர்களுக்கு மாத ஊதியமாக ரூ.15,000/– வழங்கப்படும்.

1. அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு பயின்று இருக்கவேண்டும்.
2. சைகை மொழிப்பாடத்தில் இந்தியச் சான்றிதழ் அல்லது பட்டயம் பெற்றிருக்க வேண்டும்.
3. கல்வி நிறுவனங்களில் மூன்றாண்டுகள் மொழிப் பெயர்ப்பாளராக பணிபுரிந்திருக்க வேண்டும்.
4. RCI ல் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
5. தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேசத் தெரிந்திருக்க வேண்டும்.
6. கூடுதல் தகுதியாக கணினி பயிற்சி மற்றும் தொழில் சார்ந்த சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும்.
7. வயது வரம்பு 21 முதல் 40 வயது வரை.
8. இனசுழற்சி – பொதுத் தேர்வு முன்னுரிமையற்றவர்

மேற்காணும் தகுதிகளை பெற்றிருக்கும் நபர்கள் www.tn.gov.in & www.scd.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை–5. என்ற முகவரிக்கு 11/05/2018 க்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**